YRDSB இன் Every Student Counts Survey (ஒவ்வொரு மாணவரும் முக்கியமானவர் - கருத்தாய்வு) 2018 (JK-தரம் 6) – இரகசியமானது

<<Last Name, First Name>>

*ஒவ்வொரு மாணவரும் முக்கியமானவர் - கருத்தாய்வு (ESCS)* எனத் தலைப்பிடப்பட்ட அமைப்பு முழுவதுமான இந்தக் கணக்கெடுப்பைத் தமது பிள்ளையுடன் இணைந்து பூர்த்தி செய்யுமாறு பாலர் வகுப்பிலிருந்து தரம் 6 வரையுமுள்ள அனைத்து மாணவர்களது பெற்றோரையும் யோர்க் பிராந்திய மாவட்ட பாடசாலைச் சபை (YRDSB) அழைக்கின்றது. *பெற்றோர் என்பது, பிள்ளைக்கான முக்கிய அல்லது அடிப்படைப் பொறுப்புக்களைக் கொண்ட பாதுகாவலர் அல்லது பராமரிப்பு வழங்குநர் ஒருவரை உள்ளடக்கிறது.*

எங்களுடைய மாணவர்களையும், அவர்களுக்குப் பாடசாலையிலும் பாடசாலைக்கு வெளியேயும் ஏற்படும் அனுபவங்களையும் நன்கு புரிந்துகொள்வதே இந்தக் கருத்தாய்வின் நோக்கமாகும். இதன் ஒட்டுமொத்தக் கண்டுபிடிப்புகள் எங்களுடைய பாடசாலைகளை மேம்படுத்த உதவுவதுடன் பின்வருவனவற்றுக்கும் பயன்படுத்தப்படும்:

- மாணவரின் வெற்றியைத் தடுக்கும் அமைப்புரீதியிலான தடைகளை அடையாளம் காணல் மற்றும் அகற்றல்;
- மேலும் சமத்துவமான மற்றும் உள்ளடக்கும் பாடசாலைச் சூழலை உருவாக்குதல்; அத்துடன்,
- மாணவரின் அடைவுகள் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துதல்.

பாடசாலைகளுக்கு ஆதாரவளங்களை எவ்வாறு ஒதுக்க வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்காக, ஒவ்வொரு கருத்தாய்வுக்கும் தனித்துவமான குறியீட்டைப் பயன்படுத்துவதன் மூலம் YRDSB, மாணவர் அடைவுகள் தரவுகளை இந்தக் கணக்கெடுப்புத் தரவுகளுடன் இணைக்கும். உங்கள் கருத்தாய்வுப் பதில்கள் இரகசியமாக இருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு, உங்கள் பெயரையோ அல்லது உங்கள் பிள்ளையின் பெயரையோ இந்த கருத்தாய்வில் தயவுசெய்து குறிப்பிட **வேண்டாம்**.

**இந்தக் கருத்தாய்வைத் தொடங்குவதற்கு முன்னர், நீங்கள் அறிந்திருக்கவேண்டிய சில முக்கியமான விடயங்கள் இருக்கின்றன:**

1. இந்தக் கருத்தாய்வைப் பூர்த்திசெய்யக் கிட்டத்தட்ட 20 நிமிடங்கள் எடுக்கும்.

2. தயவுசெய்து இந்த கருத்தாய்வை ***உங்கள் பிள்ளையுடன் இணைந்து*** பூர்த்தி செய்யுங்கள். அவருடைய பெயர் இந்தக் கடிதத்தின் மேற்பகுதியில் காணப்படவேண்டும். உங்களுடைய பிள்ளையின் பெயர் இந்தக் கடிதத்தில் இல்லாவிட்டால், தயவுசெய்து உங்களுடைய பாடசாலையுடன் தொடர்புகொண்டு உங்களுடைய பிள்ளைக்குரிய சரியான கருத்தாய்வுத் தொகுப்பைக் கேளுங்கள். பாலர் வகுப்பிலிருந்து தரம் 6 வரை உங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் இருந்தால், உங்களுடைய பிள்ளைகள் ஒவ்வொருவருக்குமான தனித்தனிக் கருத்தாய்வுத் தொகுப்பு உங்களுக்குக் கிடைக்கும். உங்களுக்குக் கிடைக்கும் ஒவ்வொரு கருத்தாய்வையும் அதிலிருக்கும் பிள்ளையின் பெயருக்கேற்ப தயவுசெய்து தனித்தனியாகப் பூர்த்தி செய்யுங்கள்.

3. இந்த கருத்தாய்வு தன்னார்வத்துக்குரியது. கேள்வியொன்றுக்குப் பதிலளிப்பதற்கு உங்களுக்கு மற்றும்/அல்லது உங்களுடைய பிள்ளைக்கு அசௌகரியமாக இருந்தால், அந்தக் கேள்வியைத் தவிர்த்து அடுத்த கேள்விக்குச் செல்லுங்கள்.

4. இந்த **இரகசியக் கருத்தாய்வு YRDSB இனால் CCI Research ஊடாக நடாத்தப்படுகின்றது.** அறிக்கையிடல் நோக்கங்களுக்காக தனிப்பட்ட பதில்கள் தொகுக்கப்படும். 2019 வசந்தகாலத்தில் ஒரு சுருக்க அறிக்கை உங்கள் பிள்ளையின் பாடசாலையிலும் இந்த சபையின் இணையத்திலும் கிடைக்கபெறும்.

5. தயவுசெய்து இப்பொழுது இந்த அறிவுறுத்தல் பக்கத்தை நீக்கிவிட்டு உங்களது பூர்த்தி செய்யப்பட்ட கருத்தாய்வைக் கடித உறையினுள் இட்டு, அந்தக் கடித உறையை ஒட்டி உங்களது பிள்ளை மூலம் அவருடைய ஆசிரியருக்குத் திருப்பி (நவம்பர் 30க்குப் பிந்தாமல்) அனுப்புங்கள்.

இந்தக் கருத்தாய்வுபற்றி உங்களுக்குக் கேள்விகள் ஏதாவது இருந்தால், தயவுசெய்து உங்களுடைய பாடசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

நீங்கள் வழங்கும் தகவல்கள் கல்விச் சட்டம், R.S.O. 1990, c. E. 2 இன் பிரிவு 170(1)(6) இன் அதிகாரத்தின் கீழ் சேகரிக்கப்படுகின்றன. அத்துடன் அவை கல்வி மற்றும் ஆய்வு நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும். தகவல் சுதந்திரம் மற்றும் தனியுரிமை சட்டம் R.S.O. 1990, c. M. 56. ஆகியவற்றுக்கு இணங்க, இந்தத் தகவல்கள் பயன்படுத்தப்படும், வெளிப்படுத்தப்படும் மற்றும் பாதுகாத்து வைக்கப்படும்.

## பகுதி A: பாடசாலை வாழ்க்கை

*பாடசாலை, வகுப்புகள் மற்றும் பாடசாலை வேலைகள் பற்றி உங்கள் பிள்ளை எப்படி உணர்கின்றார் என்பது, ஒரு மாணவர் என்ற வகையில் அவருடைய வெற்றிக்கு மிகவும் முக்கியமாகும். பின்வரும் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போது, தயவுசெய்து உங்கள் பிள்ளையின் தற்போதைய பாடசாலையைப் பற்றி சிந்தியுங்கள்.*

| 1 | இந்தப் பாடசாலையைப் பற்றி உங்களுடைய பிள்ளை என்ன நினைக்கின்றார்? | முழுமையாக ஒப்புக் கொள்கிறேன் | ஒப்புக் கொள்கிறேன் | நிராகரிக்கிறேன் | முற்றாக நிராகரிக்கிறேன் | தெரியவில்லை |
|---|---|---|---|---|---|---|
| | இந்தப் பாடசாலையில் வரவேற்கப்படுவதாக எனது பிள்ளை உணர்கின்றார். | ① | ② | ③ | ④ | ⑤ |
| | எனது பிள்ளை, தான் இந்தப் பாடசாலையைச் சார்ந்தவர் என உணர்கின்றார். | ① | ② | ③ | ④ | ⑤ |
| | இந்தப் பாடசாலையில் இருப்பது எனது பிள்ளைக்குப் பிடித்திருக்கிறது. | ① | ② | ③ | ④ | ⑤ |
| | இந்தப் பாடசாலையில் உள்ள ஏனைய மாணவர்களுடன் எனது பிள்ளை ஒத்துப்போகிறார். | ① | ② | ③ | ④ | ⑤ |
| | இந்தப் பாடசாலையில் உள்ள ஏனைய மாணவர்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதாக எனது பிள்ளை உணர்கின்றார். | ① | ② | ③ | ④ | ⑤ |
| | இந்தப் பாடசாலை விதிகள் நியாயமான முறையில்எனது பிள்ளைக்குப் பயன்படுத்தப்படுகின்றன. | ① | ② | ③ | ④ | ⑤ |
| | இந்தப் பாடசாலையில் எனது பிள்ளை மரியாதையுடன் நடத்தப்படுகிறார். | ① | ② | ③ | ④ | ⑤ |
| | அனைத்து மக்களிடையேயும் உள்ள வேறுபாடுகளை இந்தப் பாடசாலை மதிக்கின்றது. | ① | ② | ③ | ④ | ⑤ |
| | எனது பிள்ளையின் திறனுக்கு ஏற்றவாறு சிறப்புறக் கற்றுக்கொள்வதற்குத் தேவையான ஆதரவு இந்தப் பாடசாலையில் அவருக்குக் கிடைக்கின்றது. | ① | ② | ③ | ④ | ⑤ |

| 2 | உங்கள் பிள்ளைக்குப் பாடசாலையில் எத்தனை நெருங்கிய நண்பர்கள் இருக்கிறார்கள்? |
|---|---|

① ஒருவருமில்லை

② ஒருவர்

② இருவர்

④ மூவர் அல்லது அதற்கு மேல்

⑤ தெரியவில்லை

| 3 | பின்வரும் கூற்றுகள் ஒவ்வொன்றுடனும் உங்களுடைய உடன்பாட்டின் அளவைக் குறிப்பிடவும்: | முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன் | ஏற்றுக் கொள்கிறேன் | நிராகரிக்கிறேன் | முற்றாக நிராகரிக்கிறேன் | தெரியவில்லை |
|---|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எனது பிள்ளையின் பாடசாலையுடன் எனக்கிருக்கும் தகவல் தொடர்பில் நான் திருப்தியடைகின்றேன். | ① | ② | ③ | ④ | ⑤ |
| எனது பிள்ளையின் பாடசாலைக்கு வருகைதருவதில் எனக்கு அசௌகரியமில்லை. | ① | ② | ③ | ④ | ⑤ |

| 4 | ஒரு வழக்கமான கல்வி ஆண்டில் உங்களுடைய பிள்ளை எத்தனை தடவைகள் இந்தப் <u>பாடசாலைச்</u> செயற்பாடுகளில் பங்குபற்றுகின்றார்? | வாராந்தம் | மாதாந்தம் | வருடத்தில் ஒரு சில தடவைகள் | ஒருபோதுமில்லை | பொருத்தமில்லை | தெரியவில்லை |
|---|---|---|---|---|---|---|---|
| | கலைகள் (உதாரணத்திற்கு, காட்சிக் கலை, நாடகம், நடனம்). | ① | ② | ③ | ④ | ⑤ | ⑥ |
| | இசை (உதாரணத்திற்கு, வாத்தியக் குழு, பாடகர் குழு). | ① | ② | ③ | ④ | ⑤ | ⑥ |
| | கலாசாரக் குழு நிகழ்ச்சிகள். | ① | ② | ③ | ④ | ⑤ | ⑥ |
| | பாடசாலை மன்றங்கள் (உதாரணத்திற்கு, சதுரங்கம் (chess), சுற்றுச்சூழல்). | ① | ② | ③ | ④ | ⑤ | ⑥ |
| | விளையாட்டுக்கள் ( உதாரணத்திற்கு, track and field, விளையாட்டு அணிகள்). | ① | ② | ③ | ④ | ⑤ | ⑥ |
| | மாணவர் மன்ற நிகழ்ச்சிகள். | ① | ② | ③ | ④ | ⑤ | ⑥ |
| | பாடசாலைப் பிரசுரங்கள் (உதாரணத்திற்கு, ஆண்டுப் புத்தகங்கள், புதினப்பத்திரிகைகள் ,வலைத்தளங்கள்). | ① | ② | ③ | ④ | ⑤ | ⑥ |
| | விசேட பாடசாலை நிகழ்வுகள் ( உதாரணத்திற்கு, நடனங்கள், இசை நிகழ்ச்சிகள்). | ① | ② | ③ | ④ | ⑤ | ⑥ |
| | தலைமைத்துவக் குழுக்கள் அல்லது செயல்திட்டங்கள். | ① | ② | ③ | ④ | ⑤ | ⑥ |

| 5 | இந்தக் கல்வி ஆண்டு ஆரம்பத்திலிருந்து, எத்தனை தடவைகள் உங்கள் பிள்ளை: | எப்போதும் | அடிக்கடி | சிலசமயம் | ஒருபோதுமில்லை | தெரியவில்லை |
|---|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அடாவடித்தனத்திற்கு* உள்ளாக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக, பாடசாலைக்குச் செல்லாதிருந்தார் அல்லது செல்ல விரும்பவில்லை? | ① | ② | ③ | ④ | ⑤ |
| பாடசாலையில் மற்ற மாணவர்களின் அடாவடித்தனத்திற்கு* உள்ளாக்கப்பட்டார் (உதாரணத்திற்கு, உடல்ரீதியான, வார்த்தைரீதியான, சமூகரீதியான மற்றும்/அல்லது இணையவழியான அடாவடித்தனம்)? | ① | ② | ③ | ④ | ⑤ |
| அவரது பாடசாலையில்/வகுப்பில் பாரபட்சத்தை ** அனுபவித்தார்? | ① | ② | ③ | ④ | ⑤ |
| அவரது பாடசாலையில்/வகுப்பில் உபத்திரவத்தை*** அனுபவித்தார்? | ① | ② | ③ | ④ | ⑤ |

**அடாவடித்தனம் என்பது, உறவுகளின்மீது மீளமீள வாய்மொழி, உடல் மற்றும்/அல்லது சமூக நடத்தை மூலம், உடல்ரீதியான மற்றும்/அல்லது உளவியல்ரீதியான தீங்கை விளைவிக்கும் ஒரு தொடர் அதிகாரத் துஷ்பிரயோகமாகும். இது ஒரு தனி நபர் அல்லது ஒரு குழு, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் மீது தங்கள் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்வதை உள்ளடக்கலாம். அடாவடித்தனம் நேரில் அல்லது இணையத்தில் நிகழலாம், அத்துடன், இது வெளிப்படையானதாக (ஒளிவுமறைவற்ற) அல்லது மறைவில் நிகழ்வதாக (இரகசியமானதாக) இருக்கலாம்.*

***உங்கள் பாலினம், இனப் பின்னணி, இனவழி, மதம், சமூக-பொருளாதாரப் பின்னணி, சிறப்பு கல்வித் தேவை, பாலியல் சார்பு, அல்லது பிற காரணிகள் காரணமாகப் பாதகமாக நடத்தப்படல் பாகுபாடு எனப்படுகிறது. பாகுபாடு வேண்டுமென்றே செய்யப்பட்டதாக அல்லது எதிர்பாராதவிதமாக ஏற்பட்டதாக இருக்கலாம்.*

**** உபத்திரவம் என்பது தொந்தரவு தரும் [எரிச்சலூட்டும் அல்லது ஆத்திரமூட்டும்] ஒரு கருத்து அல்லது நடத்தை ஆகும், இது விரும்பத்தகாதது எனத் தெரிந்திருக்கும் அல்லது நியாயப்படி தெரிந்திருக்க வேண்டும்.*

| 6 | பின்வரும் கூற்றுகள் ஒவ்வொன்றுடனும் உங்களுடைய உடன்பாட்டின் அளவை மதிப்பிடவும்: | முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன். | ஏற்றுக் கொள்கிறேன் | நிராகரிக்கிறேன் | முற்றாக நிராகரிக்கிறேன் | தெரியவில்லை |
|---|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எனது பிள்ளை இந்தப் பாடசாலையில் பாதுகாப்பாக இருப்பதாக உணர்கின்றார். | ① | ② | ③ | ④ | ⑤ |
| எனது பிள்ளை பாடசாலைக்குச் செல்லும்போதும் திரும்ப வரும்போதும் பாதுகாப்பாக இருப்பதாக உணர்கின்றார். | ① | ② | ③ | ④ | ⑤ |
| எனது பிள்ளை அடாவடித்தனத்துக்கு* உட்படுத்தப்பட்டால், அவர் சௌகரியமாகக் கதைக்கக்கூடிய வயதுவந்த ஒருவர் இந்தப் பாடசாலையில் இருக்கின்றார். | ① | ② | ③ | ④ | ⑤ |
| வேறு யாராவது ஒருவர் அடாவடித்தனத்துக்கு* உட்படுத்தப்படுவதாக எனது பிள்ளை அறிந்தால், அவர் சௌகரியமாகக் கதைக்கக்கூடிய வயதுவந்த ஒருவர் இந்தப் பாடசாலையில் இருக்கின்றார். | ① | ② | ③ | ④ | ⑤ |

| 7 | இந்தக் கல்வி ஆண்டு ஆரம்பமானதிலிருந்து, குறிப்பிடத்தக்க ஒரு பின்விளைவை அல்லது அதிபர் அல்லது உப அதிபரின் நடவடிக்கையை விளைவாக்கிய சம்பவமொன்றில் உங்களுடைய பிள்ளை சம்பந்தப்பட்டுள்ளாரா? |
|---|---|

| | | |
|---|---|---|
| ① | ஆம் | கேள்வி 8க்குச் செல்லுங்கள் |
| ② | இல்லை | நேரடியாகக் கேள்வி 9க்குச் செல்லுங்கள் |
| ③ | தெரியவில்லை | நேரடியாகக் கேள்வி 9க்குச் செல்லுங்கள் |

| | |
|---|---|
| 8 | ஆம் என்றால், இந்தப் பின்விளைவு அல்லது நடவடிக்கையில் சம்பந்தப்பட்டிருந்தது என்ன? பொருத்தமான அனைத்தையும் தயவுசெய்து தெரிவுசெய்யுங்கள். |

① அதிபர்/உப-அதிபருடன் உரையாடல்

② தடுத்துவைக்கப்பட்டிருந்தார் அல்லது இடைவேளையின்போது அலுவலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தார் (உதாரணத்திற்கு, பாடசாலை முடிந்தபின் மறித்து வைத்திருக்கப்படுதல் அல்லது பாடசாலை தொடங்கமுன்னர் வரும்படி வேண்டப்படுதல்)

③ ஒரு மன்னிப்புக் குறிப்பு எழுதுதல்

④ மறுசீரமைப்புக் கலந்துரையாடல்/குழு

⑤ பாடசாலை ஆதாரவள அதிகாரியுடன் (யோர்க் பிராந்திய காவல்படை) ஒரு கலந்துரையாடல்/சந்திப்பு

⑥ பிள்ளை மற்றும் இளைஞர் பணியாளர் (CYW) அல்லது கல்வி உதவியாளர் (EA) ஒருவருடன் கலந்துரையாடல்

⑦ வகுப்பில் இருந்து அகற்றப்படுதல் (அத்துடன் வேறு எங்காவது, அலுவலகத்திலோ அல்லது வேறொரு வகுப்பறையிலோ வைத்திருத்தல்)

⑧ பாடத்திட்டத்திற்குப் புறம்பான செயற்பாடுகளிலிருந்து விலக்கப்படல் அல்லது ஒரு பகுதியைத் தவறவிடல் (உதாரணத்திற்கு, விளையாட்டு அணி, மன்றம்)

⑨ அலுவலகத்தில் வைக்கப்பட்டிருத்தல்

⑩ பாடசாலையிலிருந்து இடைநீக்கம்

⑪ ACCESS திட்டம் (மாற்று வகுப்பறை மற்றும் வெளியேற்றப்பட்ட மற்றும் இடைநீக்கம் செய்யப்பட்ட மாணவர்களுக்கான ஆலோசனை)

⑫ மேலே பட்டியலிடப்படாத ஒரு ஒழுங்காட்சி/பின்விளைவு (தயவுசெய்து என்னவெனக் குறிப்பிடுங்கள்): ________________

⑬ தெரியவில்லை

## பகுதி B: எனது பிள்ளை பற்றி

*உங்கள் பிள்ளை பற்றி மேலும் அறிய நாங்கள் விரும்புகிறோம், அப்படியானால் அவர்களின் கற்றலுக்கு நாங்கள் ஆதரவளிக்க முடியும். நீங்கள் வழங்கும் பதில்கள், உங்கள் பிள்ளைக்கும் ஏனைய மாணவர்களுக்கும் நாங்கள் சிறப்பாகச் சேவை செய்ய உதவும். தயவுசெய்து பின்வரும் கேள்விகளுக்கு விடையளிக்கவும். ஆனால், ஒரு கேள்விக்கு விடை தெரியாவிட்டால் அல்லது அது உங்களை அசௌகரியமடையச் செய்தால் நீங்கள் அந்தக் கேள்வியைத் தவிர்ப்பதற்குத் தயங்கவேண்டாம்.*

| 9 | உங்களுடைய பிள்ளை தற்போது எந்த வகுப்பில் படிக்கின்றார்? |
|---|---|

① பாலர் வகுப்பு 1 (கனிஷ்ட பாலர் தரம்)
② பாலர் வகுப்பு 2 (சிரேஷ்ட பாலர் தரம்)
③ தரம் 1
④ தரம் 2
⑤ தரம் 3
⑥ தரம் 4
⑦ தரம் 5
⑧ தரம் 6

| 10 | உங்கள் பிள்ளை பேசுவதற்குக் கற்றுக்கொண்ட முதல் மொழி(கள்) என்ன? பொருத்தமான அனைத்தையும் தயவுசெய்து தெரிவுசெய்யுங்கள். |
|---|---|

① அல்பேனியன்
② அரபிக்
③ பெங்காலி
④ கன்ரனிஸ்
⑤ கொரேசியன்
⑥ டாரி
⑦ டச்
⑧ ஆங்கிலம்
⑨ ப்பாஸி
⑩ பிரெஞ்சு
⑪ ஜேர்மன்
⑫ கிறீக்
⑬ குஜராத்தி
⑭ ஹீப்ரு
⑮ இந்தி
⑯ ஹங்கேரியன்
⑰ சுதேச மொழி(கள்)
⑱ இத்தாலியன்
⑲ கொரியன்
⑳ மலையாளம்
㉑ மன்டரின்
㉒ போலிஷ்
㉓ போத்துக்கீஸ்
㉔ பஞ்சாபி
㉕ ரஸ்சியன்
㉖ சேர்பியன்
㉗ சோமாலி
㉘ ஸ்பானிஷ்
㉙ ரகலொக்
㉚ தமிழ்
㉛ உக்ரேனியன்
㉜ உருது
㉝ வியட்னாமிஸ்
㉞ மேலே பட்டியலிடப்படாத ஒரு மொழி (தயவுசெய்து ______________________
㉟ நிச்சயமில்லை
㊱ எனக்கு இந்தக் கேள்வி விளங்கவில்லை

| 11 | உங்கள் பிள்ளை முதற்குடிகள், Métis, அத்துடன்/அல்லது Inuit ஆக அடையாளம் காணப்படுகிறாரா? ஆம் எனில், பொருத்தமான அனைத்தையும் தெரிவுசெய்யுங்கள். |
|---|---|

① இல்லை
② ஆம், முதற்குடிகள்
③ ஆம், Métis
④ ஆம், Inuit

| | |
|---|---|
| 12 | உங்கள் பிள்ளையின் இனம் அல்லது கலாச்சார* மூலம்(மூலங்கள்) என்ன? பொருத்தமான அனைத்தையும் தயவுசெய்து வழங்குங்கள். (உதாரணத்திற்கு, கனேடியர் சீனர், கிழக்கு இந்தியர், ஆங்கிலேயர், இத்தாலியர், பிலிப்பினோ, ஸ்கொட்டிஷ், ஐரிஸ், Anishnaabe, Ojibway, Mi'kmaq, Cree, Haudenosaunee, Métis, Inuit, போத்துக்கீசர்,ஜெர்மனியர், போலிஷ், டச், பிரெஞ்ச், ஜமேக்கர், பாகிஸ்தானியர், ஈரானியர், இலங்கையர், கொரியர், உக்ரேனியர், லெபனீஸ், கயனீஸ், சோமாலியர், கொலம்பியர், ஜூயிஷ், போன்றோர்) |

** இனக்குழுக்கள், பொதுவான அடையாளம், பாரம்பரியம், குல மரபு அல்லது கடந்தகால வரலாறு, பொதுவாக அடையாளம் காணக்கூடிய கலாச்சார, மொழியியல் மற்றும்/அல்லது மத குணவியல்புகள் கொண்டவை.*

| | |
|---|---|
| 13 | உங்கள் பிள்ளை தன்னை ஒரு கனடியன் என்று கருதுகின்றாரா? |

① ஆம்

② இல்லை

③ நிச்சயமில்லை

| 14 | எமது சமுதாயத்தில், மக்கள் பெரும்பாலும் தங்கள் இனம் அல்லது இனப் பின்னணியால் விவரிக்கப்படுகிறார்கள். உதாரணத்துக்கு , சிலர் “வெள்ளையினத்தவர்" அல்லது "கறுப்பினத்தவர்" அல்லது “கிழக்கு/தென்கிழக்கு ஆசியர்" போன்று அழைக்கப்படுகிறார்கள். எந்த இனப்பிரிவு* உங்களுடைய பிள்ளையைச் சிறப்பாக விவரிக்கின்றது?பொருத்தமான அனைத்தையும் தயவுசெய்து தெரிவுசெய்யுங்கள். |
|---|---|

① கறுப்பினத்தவர் (ஆபிரிக்கர், ஆபிரிக்க-கரிபியன், ஆபிரிக்க - கனடிய வம்சாவழி)

② கிழக்கு ஆசியர் (சீனர், கொரியர், ஜப்பானியர், தாய்வான் வம்சாவழி)

③ சுதேசிகள் (முதற்குடிகள், Métis, Inuit வம்சாவழி)

④ Latino/Latina/Latinx (லத்தீன் அமெரிக்கன், Hispanic வம்சாவழி)

⑤ மத்திய கிழக்கினர் (அரேபியர், பேர்சியன், மேற்காசிய வம்சாவழி, உதாரணத்திற்கு, ஆப்கானியர், எகிப்தியர், ஈரானியர், லெபனீஸ், துருக்கியர், குர்திஷ் போன்றோர்)

⑥ தெற்காசியர் (தெற்காசிய வம்சாவழி, உதாரணத்திற்கு, கிழக்கு இந்தியர், பாகிஸ்தானியர், பங்களதேஷி, இலங்கையர், இந்திய- கரிபியர் போன்றோர்)

⑦ தென்கிழக்கு ஆசியர் (பிலிப்பினோ, வியட்னாமிஸ், கம்போடியர், தாய், இந்தோனேசியர், ஏனைய தென்கிழக்கு ஆசிய வம்சாவழி)

⑧ வெள்ளையினத்தவர் (ஐரோப்பிய வம்சாவழி)

⑨ மேலே குறிப்பிடப்படாத ஒரு இனம் அல்லது இனப் பின்னணி (தயவுசெய்து குறிப்பிடவும்): ________________

⑩ தெரியவில்லை

⑪ எனக்கு இந்தக் கேள்வி விளங்கவில்லை

** இனம் என்பது பொதுவான வம்சாவளி மற்றும் குணாதிசயங்கள் என்ற கருத்தாக்க அடிப்படையில் மக்களைக் குழுக்களாகப் பிரிக்கும் மற்றும் எவ்வாறு சில மக்கள் கருதப்படுகின்றனர் மற்றும் நடாத்தப்படுகின்றனர் என்பதில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு சமூக சொற்பதமாகும். பெரும்பான நேரங்களில் இனம் என்பதும் இனக்குழு (ஒரு குறிப்பிட்ட கலாச்சாரப் பாரம்பரியம் அல்லது பூர்வீகத்தைப் பகிர்ந்து கொள்ளும் மக்கள் குழு ஒன்றுடன்) என்பதும் ஒன்றெனக் கருதப்படுவதுண்டு; அடையாளப்படுத்தப்பட்ட இனக்குழு ஒன்றினுள் பல இனக்குழுக்கள் இருக்கலாம்.*

| 15 | உங்கள் பிள்ளையின் மதம் மற்றும்/அல்லது ஆன்மீகத் தொடர்பு* என்ன?<br>பொருத்தமான அனைத்தையும் தயவுசெய்து தெரிவுசெய்யுங்கள். |
|---|---|

- ① அறியாவாதி (Agnosti (கடவுள் அல்லது கடவுள்கள் எவராவது இருக்கின்றார்களா என அறிவது சாத்தியமில்லை என்று எண்ணும் ஒரு நபர்)
- ② நாத்திகர் *(கடவுள் அல்லது கடவுள்கள் எவரும் இல்லை என்று நம்பும் ஒரு நபர்)*
- ③ புத்தமதத்தவர்
- ④ கத்தோலிக்கர்
- ⑤ கிறிஸ்தவர் (கத்தோலிக்கர் அல்லாதோர்)
- ⑥ இந்துமதத்தவர்
- ⑦ முதற்குடி ஆன்மிகவாதிகள்
- ⑧ ஜூயிஷ்
- ⑨ இஸ்லாமியர்
- ⑩ சீக்கியர்
- ⑪ மத சார்பற்ற ஆன்மீக உணர்வு
- ⑫ மத அல்லது ஆன்மீகத் தொடர்பில்லை
- ⑬ மேலே குறிப்பிடப்படாத மதம் அல்லது ஆன்மீகத் தொடர்பு (தயவுசெய்து குறிப்பிடவும்): ________________
- ⑭ தெரியவில்லை
- ⑮ எனக்கு இந்தக் கேள்வி விளங்கவில்லை

** மக்கள், அவர்களின் மதத்தின் அல்லது அவர்கள் என்ன மதமென அனுமானிக்கப்பட்ட மதத்தில் அடிப்படையில் வித்தியாசமாக நடத்தப்படலாம், இது எதிர்மறையான தாக்கங்கள் மற்றும் நியாமற்ற விளைவுகளை ஏற்படுத்தலாம். இஸ்லாமிய மதவாதம் மற்றும் யூதவெறுப்பு இனமயமாக்கப்படக்கூடிய வழிமுறைக்கு உதாரணங்களாகும். மக்கள் தோலின் நிறத்தின் அடிப்படையில் மட்டுமன்றி மதத்துடன் தொடர்புபட்ட ஏனைய கருத்தாக்க அம்சங்களாலும் இனவாதத்தை அனுபவிக்கக்கூடும்.*

| 16 | உங்கள் பிள்ளையின் பாலின அடையாளம்* என்ன? |
|---|---|

① பெண் / சிறுமி

② ஆண் / சிறுவன்

③ ஆணாகவும் பெண்ணாகவும் இருப்பவர் *( பாலின அடையாளம் அல்லது வெளிப்பாடு, பாலின வீச்சுடன் சேர்ந்து மாற்றமடையும் அல்லது இடம்மாறும் ஒரு நபராக அல்லது அதனுடன் தொடர்பானவராக இருத்தல்.)*

④ பாலின இணக்கமின்மை *(பிறப்பில் ஒரு நபருக்கு வழங்கப்பட்ட பால் பற்றிக் குறிப்பிட்ட ஒரு சமூகத்தில் செய்யப்பட்ட கலாச்சாரத் தொடர்புகளுடன் இணக்கமின்மை.)*

⑤ இருபாலினமுமற்றவர் *(ஆண் அல்லது பெண் என்ற இரு பாலினக் கோட்பாட்டுடன் பொருந்தாத பாலின அடையாளத்தைக் கொண்ட ஒரு நபரின் பாலின அடையாளத்தைக் குறிக்கும்.)*

⑥ கேள்விக்குரியது *(தனது சொந்தப் பாலின அடையாளம் பற்றி சரியாகத் தெரியாத ஒரு நபரைக் குறிக்கும்.)*

⑦ மாற்றுப்பாலினத்தவர் *(பிறப்பிலிருந்த பாலுடன் தொடர்புடைய பாலின அடையாளத்திலிருந்து மாறுபடும் பாலின அடையாளமுள்ள ஒரு நபரைக் குறிக்கும்.)*

⑧ இரட்டை- உள்ளுணர்வு *(ஆண்மை, பெண்மை அல்லது இருபாலினமுமற்ற உள்ளுணர்வு உள்ளடங்கிய பாலின அடையாளம், ஆன்மீக அடையாளம் அல்லது பாலியல் நாட்டமுள்ள ஒரு பூர்வீக நபர்.)*

⑨ மேலே பட்டியலிடப்படாத ஒரு பாலின அடையாளம் (தயவுசெய்து குறிப்பிடவும்): ______________________________

⑩ தெரியவில்லை

⑪ எனக்கு இந்தக் கேள்வி விளங்கவில்லை

⑫ நான் பதிலளிக்க விரும்பவில்லை

** ஒரு நபர், தான் ஒரு ஆண், ஒரு பெண், இரண்டும், இரண்டுமில்லை, அல்லது பாலினத் தோற்றம் மீது வேறொரு அடையாளமாக இருப்பதாக மனதார மற்றும் ஆழமாக உணரலாம். ஒரு நபரின் பாலின அடையாளம் பிறப்பிலுள்ள பாலிலிருந்து வேறுபட்டிருக்கலாம் (உதாரணத்திற்கு, பெண், இருபாலினம், ஆண்).*

| 17 | உங்கள் பிள்ளையை ஒரு வலுவிழந்தவராக* நீங்கள் கருதுகின்றீர்களா? தயவுசெய்து ஒரு பதிலை மட்டும் தெரிவுசெய்யுங்கள். |
|---|---|

| | | |
|---|---|---|
| ① | ஆம் | கேள்வி 18க்குச் செல்லுங்கள் |
| ② | இல்லை | நேரடியாகக் கேள்வி 19க்குச் செல்லுங்கள் |
| ③ | தெரியவில்லை | நேரடியாகக் கேள்வி 19க்குச் செல்லுங்கள் |
| ④ | எனக்கு இந்த கேள்வி விளங்கவில்லை | நேரடியாகக் கேள்வி 19க்குச் செல்லுங்கள் |
| ⑤ | நான் பதிலளிக்க விரும்பவில்லை | நேரடியாகக் கேள்வி 19க்குச் செல்லுங்கள் |

** வலுவிழப்பு என்பது கண்ணுக்குப் புலப்படும் மற்றும் கண்ணுக்குப் புலப்படாத ஒரு பரந்த அளவிலான மற்றும் பரவலான, நிலைமைகளை உள்ளடக்கும் ஒரு சொற்பதமாகும்.(உ+ம்., உடல், மனநல, மற்றும் கற்றல் வலுவிழப்புகள், செவிப்புலன் அல்லது பார்வை வலுவிழப்புகள், காக்காய் வலிப்பு, சுற்றுச்சூழல் உணர்திறன்கள்). ஒரு வலுவிழப்பு பிறப்பிலிருந்து இருக்கலாம், ஒரு விபத்தினால் ஏற்படலாம், அல்லது காலப்போக்கில் உருவாகலாம். வலுவிழப்பு தற்காலிகமானதாக, விட்டுவிட்டு வருவதாக அல்லது நிரந்தரமானதாக இருக்கக்கூடும்.*

| 18 | உங்கள் பிள்ளையின் வலுவிழப்பை* நீங்கள் எவ்வாறு விவரிப்பீர்கள்* ? பொருத்தமான அனைத்தையும் தயவுசெய்து தெரிவுசெய்யுங்கள். |
|---|---|

| | | | |
|---|---|---|---|
| ① | மதி இறுக்கம்(Autism) | ⑥ | மனநல வலுவிழப்பு |
| ② | பார்வையற்றவர் அல்லது பார்வைக் குறைவு | ⑦ | ஏதாவதொரு பொருளுக்கு (பொருள்களுக்கு) அடிமையாதல் |
| ③ | செவிப்புலனற்றவர் அல்லது கேட்டல் குறைவு | ⑧ | உடல்சார் வலுவிழப்பு |
| ④ | வளர்ச்சிசார்ந்தது | ⑨ | பேச்சுத் தடங்கல் |
| ⑤ | கற்றல் வலுவிழப்பு | ⑩ | மேலே குறிப்பிடப்படாத ஒரு வலுவிழப்பு (தயவுசெய்து குறிப்பிடவும்): ____________________ |

| 19 | உங்கள் பிள்ளை கனடாவில் பிறந்தாரா? |
|---|---|

| | | |
|---|---|---|
| ① | ஆம் | நேரடியாகக் கேள்வி 21க்குச் செல்லுங்கள் |
| ② | இல்லை | கேள்வி 20க்குச் செல்லுங்கள் |

| 20 | இல்லை எனில், உங்கள் பிள்ளை தற்பொழுது: |
|---|---|

① ஒரு கனடியப் பிரஜை
② ஒரு சர்வதேச மாணவர் (கற்றல் அனுமதி ஒன்றின் மூலம் சேர்ந்தார்)
③ ஒரு குடிவரவாளர்/ நிரந்தர வதிவாளர்
④ ஒரு அகதி அந்தஸ்து கோருபவர்
⑤ தெரியவில்லை
⑥ எனக்கு இந்தக் கேள்வி விளங்கவில்லை

| 21 | கனடாவில் எவ்வளவு காலம் உங்கள் பிள்ளை வசித்துள்ளார்? |
|---|---|

① 1 வருடத்துக்குக் குறைவு
② 1 வருடம்
③ 2 வருடங்கள்
④ 3 வருடங்கள்
⑤ 4 வருடங்கள்
⑥ 5 வருடங்கள்
⑦ 6 வருடங்கள்
⑧ 7 வருடங்கள்
⑨ 8 வருடங்கள்
⑩ 9 வருடங்கள் அல்லது அதற்கு மேல்

| 22 | உங்கள் வீட்டில் பெரும்பாலும் பேசப்படும் மொழி(கள்) என்ன? பொருத்தமான அனைத்தையும் தயவுசெய்து தெரிவுசெய்யுங்கள். |
|---|---|

① அல்பேனியன்
② 2 அரபிக்
③ பெங்காலி
④ கன்ரனீஸ்
⑤ குறேசியன்
⑥ டாரி
⑦ டச்
⑧ ஆங்கிலம்
⑨ ப்பாஸி
⑩ பிரெஞ்ச்
⑪ ஜேர்மன்
⑫ கிறீக்
⑬ குஜராத்தி
⑭ ஹீபுறு
⑮ இந்தி
⑯ ஹங்கேரியன்
⑰ சுதேச மொழி(கள்)
⑱ இத்தாலியன்
⑲ கொரியன்
⑳ மலையாளம்
㉑ மன்டரின்
㉒ போலிஷ்
㉓ போத்துகீஸ்
㉔ பஞ்சாபி
㉕ ரஷ்யன்
㉖ சேர்பியன்
㉗ சோமாலி
㉘ ஸ்பானிஷ்
㉙ ரகலொக்
㉚ தமிழ்
㉛ உக்ரேனியன்
㉜ உருது
㉝ வியட்னாமிஸ்
㉞ மேலே பட்டியலிடப்படாத ஒரு மொழி (தயவுசெய்து குறிப்பிடவும்): ____________________
㉟ தெரியவில்லை
㊱ எனக்கு இந்தக் கேள்வி விளங்கவில்லை

| 23 | உங்களுடைய பிள்ளைக்கு எப்போதாவது பாடசாலையில் ஆங்கிலத்திற்காக, அது ஒரு மேலதிக மொழி என்ற வகையில் உதவி கிடைத்துள்ளதா? |
|---|---|

| | | |
|---|---|---|
| ① | ஆம், எனது பிள்ளைக்கு இப்போது உதவி கிடைக்கின்றது. | கேள்வி 24க்குச் செல்லுங்கள் |
| ② | ஆம், எனது பிள்ளைக்கு முன்பு உதவி கிடைத்துள்ளது | கேள்வி 24க்குச் செல்லுங்கள் |
| ③ | இல்லை, எனது பிள்ளைக்கு ஒருபோதும் உதவி கிடைக்கவில்லை . | நேரடியாகக் கேள்வி 28க்குச் செல்லுங்கள் |
| ④ | எனது பிள்ளைக்கு உதவி கிடைத்ததா என எனக்குத் தெரியாது. | நேரடியாகக் கேள்வி 28க்குச் செல்லுங்கள் |

| 24 | உங்களுடைய பிள்ளைக்குப் பாடசாலையில் ஆங்கிலத்திற்காக, அது ஒரு மேலதிக மொழி என்ற வகையில் உதவி கிடைத்திருந்தால் (தற்போது அல்லது கடந்த காலத்தில்), இந்த உதவியை வழங்கியது யார்? பொருத்தமான அனைத்தையும் தயவுசெய்து தெரிவுசெய்யுங்கள். |
|---|---|

① ESL ஆசிரியர் /ELL உதவி ஆசிரியர்

② வகுப்பறை/பாட ஆசிரியர்

③ ஏனையோர் (தயவுசெய்து குறிப்பிடவும்) ____________________________

④ தெரியவில்லை

⑤ எனக்கு இந்தக் கேள்வி விளங்கவில்லை

| 25 | உங்கள் பிள்ளைக்கு ஆங்கில மொழி உதவி கிடைத்தால் அல்லது கிடைத்திருந்தால், அது அவருடைய வகுப்பறைக் கற்றலுக்கு உதவியளித்ததா? |
|---|---|

① ஆம்

② இல்லை

③ தெரியவில்லை

| 26 | உங்களுடைய பிள்ளையின் STEP தரமட்டம் பற்றி உங்களுக்குத் தெரியுமா? |
|---|---|

| | | |
|---|---|---|
| ① | ஆம் | கேள்வி 27க்குச் செல்லுங்கள் |
| ② | இல்லை | நேரடியாகக் கேள்வி 28க்குச் செல்லுங்கள் |
| ③ | இதன் கருத்து என்னவென எனக்குத் தெரியவில்லை | நேரடியாகக் கேள்வி 28க்குச் செல்லுங்கள் |

| 27 | பின்வரும் ஒவ்வொன்றிலும் உங்கள் பிள்ளையின் STEP தரமட்டத்தைத் தயவுசெய்து குறிப்பிடுங்கள்: |
|---|---|

| | STEP 1 | STEP 2 | STEP 3 | STEP 4 | STEP 5 | STEP 6 | தெரியவில்லை |
|---|---|---|---|---|---|---|---|
| வாசித்தல் | ① | ② | ③ | ④ | ⑤ | ⑥ | ⑦ |
| எழுதுதல் | ① | ② | ③ | ④ | ⑤ | ⑥ | ⑦ |
| செவிமடுத்தல் மற்றும் கதைத்தல் | ① | ② | ③ | ④ | ⑤ | ⑥ | ⑦ |

| 28 | உங்களைப் பற்றியும் உங்களுடைய பிள்ளையுடனான உங்களுடைய உறவைப் பற்றியும் உள்ள பின்வரும் கேள்விகளுக்கு தயவுசெய்து பதில் அளியுங்கள். |
|---|---|

| பெற்றோர்/பாதுகாவலர் 1 (நீங்கள்) | |
|---|---|
| i) | தயவுசெய்து உங்களுடைய பிள்ளையுடனான உங்களுடைய உறவுமுறையைக் குறிப்பிடுங்கள். (ஒரு பதிலை மட்டும் தெரிவுசெய்யுங்கள்) |

① தாய்
② தந்தை
③ மாற்றாந்தாய்
④ மாற்றாந்தந்தை
⑤ பேரர்
⑥ உறவினர்
⑦ பாதுகாவலர்
⑧ வளர்ப்புப் பெற்றோர்
⑨ நண்பர்
⑩ ஏனைய நபர் (தயவுசெய்து குறிப்பிடவும்): ____________________________________

| பெற்றோர்/பாதுகாவலர் 2 (பொருத்தமில்லை எனில் இந்தப் பகுதியைத் தவிருங்கள்) | |
|---|---|
| i) | உங்கள் பிள்ளையுடனான இந்த நபரின் உறவுமுறையைத் தயவுசெய்து குறிப்பிடுங்கள் (ஒரு பதிலை மட்டும் தெரிவுசெய்யுங்கள்) |

① தாய்
② தந்தை
③ மாற்றாந்தாய்
④ மாற்றாந்தந்தை
⑤ பேரர்
⑥ உறவினர்
⑦ பாதுகாவலர்
⑧ வளர்ப்புப் பெற்றோர்
⑨ நண்பர்
⑩ ஏனைய நபர் (தயவுசெய்து குறிப்பிடவும்): ____________________________________

| | |
|---|---|
| ii) | நீங்கள் பூர்த்தி செய்த மிக உயர்ந்த கல்வித் தரத்தைக் குறிப்பிடுங்கள். (ஒரு பதிலை மட்டும் தெரிவுசெய்யவும்) |

① முறையான எந்தக் கல்வியையும் பூர்த்தி செய்யவில்லை
② ஆரம்பப் பாடசாலை
③ உயர்தரப் பாடசாலை
④ தொழிற்பயிற்சி
⑤ கல்லூரி
⑥ பல்கலைக்கழகம்
⑦ தெரியவில்லை

| | |
|---|---|
| iii) | தொழில் செய்கிறீர்களா? (ஒரு பதிலை மட்டும் தெரிவுசெய்யுங்கள்) |

① முழுநேர வேலை செய்பவர்
② பகுதி நேர வேலை செய்பவர்
③ சுய தொழில் செய்பவர் (உதாரணத்திற்கு, சொந்த வர்த்தகம் உங்களிடம் இருத்தல்)
④ தொழிலற்றவர் (தற்போது தொழில் புரியவில்லை, ஆனால் வேலை ஒன்றைத் தேடுபவர்)
⑤ தொழில் புரியவில்லை/வீட்டில் தங்கியிருக்கும் பெற்றோர்/பாதுகாவலர்
⑥ ஓய்வு பெற்றவர்
⑦ தெரியவில்லை

| | |
|---|---|
| iv) | உங்களது வேலை அல்லது தொழில் என்ன? (தயவுசெய்து தொழிலின் பதவியை அல்லது சுருக்கமான விவரத்தை வழங்குங்கள்) |

____________________________________

② தெரியவில்லை

| | |
|---|---|
| ii) | இந்த நபர் பூர்த்திசெய்த அதியுயர் கல்வி நிலையைத் தயவுசெய்து தெரிவுசெய்யுங்கள். (ஒரு பதிலை மட்டும் தெரிவுசெய்யுங்கள்) |

① முறையான எந்தக் கல்வியையும் பூர்த்தி செய்யவில்லை
② ஆரம்பப் பாடசாலை
③ உயர்தரப் பாடசாலை
④ தொழிற்பயிற்சி
⑤ கல்லூரி
⑥ பல்கலைக்கழகம்
⑦ தெரியவில்லை

| | |
|---|---|
| iii) | இந்த நபர் தொழில் செய்கிறாரா? (ஒரு பதிலை மட்டும் தெரிவுசெய்யுங்கள்) |

① முழுநேர வேலை செய்கிறார்
② பகுதி நேர வேலை செய்கிறார்
③ சுய தொழில் (உதாரணத்திற்கு, சொந்த வர்த்தகத்தை அவர்கள் வைத்திருத்தல்)
④ தொழில் செய்யவில்லை (தற்சமயம் வேலை செய்யவில்லை ஆனால் ஒரு வேலை தேடுபவர்)
⑤ தொழில் புரியவில்லை/வீட்டில் தங்கியிருக்கும் பெற்றோர்/பாதுகாவலர்
⑥ ஓய்வு பெற்றவர்
⑦ தெரியவில்லை

| | |
|---|---|
| iv) | இந்த நபரின் வேலை அல்லது தொழில் என்ன? (தொழிலின் பதவியை அல்லது சுருக்கமான விவரத்தைத் தயவுசெய்து வழங்குங்கள்) |

____________________________________

② தெரியவில்லை

| பகுதி C : பாடசாலைக்கு வெளியேயான வாழ்க்கை |
|---|
| *பின்வரும் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போது பாடசாலைக்கு வெளியிலுள்ள உங்களது பிள்ளையின் வாழ்க்கை பற்றிச் சிந்தியுங்கள்.* |

| 29 | உங்களது பிள்ளை பாடசாலைக்கு வெளியேயான இந்தச் செயல்பாடுகளில் எத்தனை தடவைகள் பங்குபற்றுகிறார் (பாடசாலை சம்பந்தப்பட்டது அல்ல)? | வாராந்தம் | மாதாந்தம் | வருடத்தில் சில தடவைகள் | ஒருபோதுமில்லை |
|---|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| கலைகள் (உதாரணத்துக்கு, காட்சிக் கலை, நாடகம், நடனம்). | ① | ② | ③ | ④ |
| இசை (உதாரணத்திற்கு, பாடகர் குழு, பியானோ பாடங்கள்). | ① | ② | ③ | ④ |
| தனிப்பட்ட விளையாட்டுகள் (உதாரணத்திற்கு, நீச்சல் வகுப்புகள், வலைப்பந்து, சீருடற்பயிற்சி (gymnastics)). | ① | ② | ③ | ④ |
| குழு விளையாட்டு (உதாரணத்திற்கு, கூடைப்பந்து, கால்பந்து, கிரிக்கெட், ஹாக்கி). | ① | ② | ③ | ④ |
| இளைஞர் செயல்திட்டங்கள், மன்றங்கள் அல்லது அமைப்புகள் (உதாரணத்திற்கு, படைப்பயிற்சி, தலைமைத்துவம், பொழுதுபோக்கு). | ① | ② | ③ | ④ |
| கலாசாரக் குழு, மத/சமய செயற்பாடுகள். | ① | ② | ③ | ④ |
| தன்னார்வத்தொண்டுச் செயற்பாடுகள். | ① | ② | ③ | ④ |
| நண்பர்களுடன் நேரத்தைச் செலவிடல். | ① | ② | ③ | ④ |

| 30 | உங்கள் பிள்ளை வீட்டுப் பாடவேலைக்காக ஒரு இரவில் சராசரியாக எவ்வளவு நேரம் செலவழிக்கிறார்? |
|---|---|

① நேரம் செலவழிப்பதில்லை
② 20 நிமிடங்களுக்குக் குறைவு
③ 20 தொடக்கம் 40 நிமிடங்கள் வரை
④ 40 தொடக்கம் 60 நிமிடங்கள் வரை
⑤ 60 நிமிடங்கள் அல்லது அதற்கு மேல்
⑥ பொருத்தமில்லை, எனது பிள்ளைக்கு வீட்டுப் பாடவேலை இருப்பதில்லை — நேரடியாகக் கேள்வி 32க்குச் செல்லுங்கள்
⑦ தெரியவில்லை

| 31 | உங்களுடைய பிள்ளைக்கு அவருடைய வீட்டுப் பாடவேலையில் உதவி தேவைப்பட்டால், வழமையில் அவருக்கு உதவி செய்வது யார்? பொருத்தமான அனைத்தையும் தயவுசெய்து தெரிவுசெய்யுங்கள். |
|---|---|

① பெற்றோர்/பாதுகாவலர்

② ஏனைய குடும்ப உறுப்பினர்கள் (உதாரணத்ததிற்கு, சகோதரன், சகோதரி, பேரர், மாமா, மாமி)

③ நண்பர்

④ ஆசிரியர்

⑤ கட்டணம் பெற்றுக் கற்பிப்பவர்

⑥ இலவசமாகக் கற்பிப்பவர் அல்லது எனது பிள்ளையின் பாடசாலையில், சமூகத்தில் அல்லது இணையத்தில் வழங்கப்படும் உதவி

⑦ எனது பிள்ளைக்கு அவரது வீட்டுப் பாட வேலையில் ஒருவரும் உதவுவதில்லை

⑧ எனது பிள்ளைக்கு அவரது வீட்டுப் பாட வேலையில் உதவி தேவையில்லை

| 32 | பின்வரும் தகமையுடன் எனது பிள்ளை உயர்தரப் பாடசாலையைப் பூர்த்திசெய்வார் என நான் எதிர்பார்க்கிறேன்...(தயவுசெய்து ஒரு பதிலை தெரிவுசெய்யுங்கள்) |
|---|---|

① உயர்தரப் பாடசாலை டிப்ளோமாவுடன் (ஒன்ராறியோ இரண்டாம் நிலைப் பாடசாலை டிப்ளோமா; OSSD)

② 14 சித்திகளுடனான ஒரு சான்றிதழ் உடன் (ஒன்ராரியோ இரண்டாம் நிலைப் பாடசாலைச் சான்றிதழ்; OSSC)

③ 21 வயதில், அவர் விசேட கல்வித் திட்டத்தைப் பூர்த்திசெய்த பின்னர்

④ தெரியவில்லை

| 33 | உயர்தரப் பாடசாலையை உங்கள் பிள்ளை பூர்த்திசெய்த பின்னர் அவர் எதைச் செய்ய வேண்டுமென நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்? பொருத்தமான அனைத்தையும் தயவுசெய்து தெரிவுசெய்யுங்கள். |
|---|---|

① ஒரு தொழில் பயிற்சியைத் தொடங்குதல்

② கல்லூரிக்குச் செல்லல்

③ பல்கலைக்கழகம் செல்லல்

④ வேலை செய்தல்

⑤ பிரயாணம் செய்தல்

⑥ சமூக அடிப்படையிலான ஒரு பகல்நேர செயல்திட்டத்துக்குச் செல்லல்

⑦ தெரியவில்லை

⑧ ஏனைய திட்டங்கள்

| 34 | உங்களுடைய பிள்ளை எப்போதெல்லாம் | எப்போதும் | அடிக்கடி | சிலநேரம் | ஒருபோதுமில்லை | தெரியவில்லை |
|---|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மகிழ்ச்சியாக இருப்பார்? | ① | ② | ③ | ④ | ⑤ |
| பதற்றமாக அல்லது ஏக்கத்துடன் இருப்பார்? | ① | ② | ③ | ④ | ⑤ |
| எதிர்காலம் பற்றி சாதகமாக எண்ணுவார்? | ① | ② | ③ | ④ | ⑤ |
| தனிமையை உணர்வார்? | ① | ② | ③ | ④ | ⑤ |
| தன்னைப்பற்றி நன்றாக உணர்வார்? | ① | ② | ③ | ④ | ⑤ |
| கவலையாக அல்லது மனச்சோர்வாக இருப்பார்? | ① | ② | ③ | ④ | ⑤ |
| பாடசாலையில் தான் ஏனையோருக்கு வேண்டப்படுபவராக உணர்வார்? | ① | ② | ③ | ④ | ⑤ |

| 35 | கடந்த 12 மாதங்களில் எத்தனை தடவைகள் உங்கள் பிள்ளை அவரது மன ஆரோக்கியம் பற்றித் தொழில்வல்லுநர் ஒருவருடன் (உதாரணத்திற்கு, மருத்துவர், ஆலோசகர், சமூக சேவையாளர், உளவியலாளர்) கதைத்திருக்கிறார்? |
|---|---|

① ஒரு தடவை

② இரு தடவைகள்

③ மூன்று தடவைகள் அல்லது அதற்கு மேல்

④ ஒருபோதுமில்லை

| 36 | பொதுவாக, உங்கள் பிள்ளையின் உடல் ஆரோக்கியம் பற்றி நீங்கள் எப்படி விவரிப்பீர்கள்? |
|---|---|

① மிக நன்று

② நன்று

③ பரவாயில்லை

④ சரியில்லை

| 37 | கடந்த 12 மாதங்களில், எத்தனை தடவை உங்கள் பிள்ளை: | ஒருபோதுமில்லை | ஒரு தடவை | இரண்டு தடவைகள் | மூன்று தடவைகள் அல்லது அதற்கு மேல் |
|---|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| தனது உடல் ஆரோக்கியம் அல்லது ஒரு பரிசோதனை தொடர்பாக மருத்துவர் ஒருவரைச் சந்தித்திருக்கிறார்? | ① | ② | ③ | ④ |
| கண் பரிசோதனை ஒன்றுக்காக மருத்துவர் ஒருவரைச் சந்தித்திருக்கிறார்? | ① | ③ | ③ | ④ |
| பல் மருத்துவர் ஒருவரைச் சந்தித்திருக்கிறார்? | ① | ④ | ③ | ④ |

| 38 | உங்கள் பிள்ளைக்கு இலவசமான அல்லது குறைந்த விலையிலான காலை உணவுத் திட்டங்கள் உதவியாக இருக்குமா? |
|---|---|

① ஆம்

② இல்லை

③ தெரியவில்லை

| 39 | பின்வரும் ஒவ்வொரு கேள்விக்கும் தயவுசெய்து பதிலளியுங்கள்: | ஒருபோதுமில்லை | ஒரு தடவை | இரண்டு தடவைகள் | மூன்று தடவைகள் அல்லது அதற்கு மேல் |
|---|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| கடந்த 12 மாதங்களில் உங்கள் பிள்ளை எத்தனை தடவைகள் இடம் மாறியிருக்கிறார் (வீடு மாறல்)? | ① | ② | ③ | ④ |
| கடந்த 12 மாதங்களில் எத்தனை தடவைகள் உங்கள் பிள்ளை பாடசாலை மாறியிருக்கிறார்? (புதிதாகப் பாடசாலை திறத்தல், வகுப்பு மாற்றம் அல்லது பிரெஞ்ச் Immersion, Gifted program போன்ற விசேட பாடத்திட்டங்களை உள்ளடக்காதீர்கள்) | ① | ② | ③ | ④ |

| 40 | <u>கடந்த பன்னிரண்டு மாதங்களில்</u> உங்கள் பிள்ளை வீடற்றவராக இருந்திருக்கிறாரா (உதாரணத்திற்கு, காப்பகங்களில் வசித்தல், வாகனங்களில் அல்லது கைவிடப்பட்ட கட்டிடங்களில் வசித்தல், இடம்மாறி மாறி couch இல் படுத்தல் (couch surfin)? |
|---|---|

① ஆம்

② இல்லை

| 41 | உங்களுடன் சேர்த்து, உங்கள் வீட்டில் தற்போது எத்தனை பேர் வசிக்கிறார்கள்? |
|---|---|

① ၊

② ၂

③ 3-4

④ 5-6

⑤ 7 அல்லது அதற்கு மேல்

| 42 | இந்த வருடம் உங்கள் குடும்பத்தின் மொத்த வீட்டு வருமானம் (வரி கழிக்க முன்பாக) என்ன? |
|---|---|

① $30,000 க்குக் குறைவு
② $30,000 – $49,999
③ $50,000 – $74,999
④ $75,000 – $99,999
⑤ $100,000 – $149,999
⑥ $150,000+